


சுவாமி சகஜானந்தா அவர்களின் 136ஆவது பிறந்த நாளினை கொண்டாடும் வகையில் கடலூர் மாவட்டம், சிதம்பரம் பகுதியில் அமைந்துள்ள சுவாமி சகஜானந்தா அவர்களின் மணிமண்டபத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (27.01.2026) மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன், மாநகராட்சி துணைமேயர் பா. தாமரைச்செல்வன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.கொ. நாகராஜபூபதி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி கமலம் உட்பட பலர் உள்ளனர்.

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# விழுப்புரம் மாவட்ட செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர்கள் செஞ்சி மஸ்தான் – டாக்டர் லட்சுமணன் – டாக்டர் பொன்,கௌதம சிகாமணி அறிவிப்பு!







விழுப்புரம், ஜன.29-

ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் குறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் லட்சுமணன் எம். எல்.ஏ, விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட திமுகஅவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் மண்டல பொறுப்பாளர், உழவர் நலன் மற்றும் வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில்

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ, விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் லட்சுமணன் எம்.எல். ஏ, விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணிஆகியோர் முன்னிலையில் இன்று (29.01.2026 - வியாழக்கிழமை) காலை 11.00 அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள்,பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதி,நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

பொருள்:

1. 01.02.2026 அன்று விழுப்புரம் மண்டலத்திற்கு வருகை தரவுள்ள “தேர்தல் அறிக்கை குழுவினர்” கூட்டத்தில் கலந்துகொள்வது தொடர்பாக.
2. 04.02.2026 அன்று விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகைதரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பாக.
3. 11.02.2026 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் மண்டல வாக்குச்சாவடி நிர்வாகிகள்மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக.
4. கழக ஆக்கப் பணிகள்.

| | | |
|---|---|---|
| **கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.** | **டாக்டர் லட்சுமணன் எம்.எல்.ஏ.** | **டாக்டர் பொன். கௌதம சிகாமணி** |
| பொறுப்பாளர் , | பொறுப்பாளர் , | பொறுப்பாளர் , |
| விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. | விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. | விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. |

### நெய்வேலியில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன், சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கடலூர், ஜன. 29 -

கடலூர் மேற்கு மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நெய்வேலி வட்டம் 25 என்.எல்.சி. தொ.மு.ச. மைதானத்தில் நடைபெற்றது.



கடலூர் மேற்கு மாவட்டம், மாணவர் அணி சார்பில் நெய்வேலியில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் சி.வெ.கணேசன் பேசினார். உடன் சபா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ., தலைமைக்கழக பேச்சாளர் ஆம்பூர் தருமன், குணசேகரன், சந்தோஷ் குமார் , குருநாதன், ஞான ஒளி, அப்துல் மஜீத் , சீனிவாசன், நன்மாற பாண்டியன், ராமச்சந்திரன், மாணவரணி சதீஷ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன்தலைமைதாங்கினார்.

நெய்வேலி நகர செயலாளரும் என்.எல்.சி. தொ.மு.ச. பொதுச்செயலாளருமான குருநாதன், கடலூர் மேற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்றனர் .

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன், தலைமைக் கழகப் பேச்சாளர் ஆம்பூர் தருமன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

இதனைத் தொடர்ந்து மொழிப்போர்த் தியாகிகளின் குடும்பத்தினரை அமைச்சர் சி.வெ.கணேசன் கௌரவித்தார். கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராசவன்னியன், மாவட்டப் பொருளாளர் தண்டபாணி, பொதுக்குழு உறுப்பினர் புகழேந்தி, என்.எல்.சி. தொ.மு.ச. தலைவர் ஞானஒளி, பொருளாளர் அப்துல் மஜித், அலுவலக செயலாளர் சீனிவாசன், அவைத் தலைவர்கள், நன்மாற பாண்டியன்,

ராமச்சந்திரன், ஒன்றிய செயலாளர் சந்தோஷ் குமார், கடலூர் மேற்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் செல்வமணி, பிலோமின், நெய்வேலி நகர அமைப்பாளர் சத்தியமூர்த்தி மற்றும் என்.எல்.சி தொ.மு.ச. நிர்வாகிகள், தி.மு.க. கிளை கழக செயலாளர் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287)பணிமனை நிர்வாகிகள் தேர்தல் 31.01.2026 அன்று நடைபெறுவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற சமரசப் பேச்சுவார்த்தை தொடர்வதால், ஆணையாளர் வழக்கறிஞர் திரு. அ.சரவணன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தேர்தல் நடைபெறும் நாள் ஒத்தி வைக்கப்படுகிறது.

சமரசத் தீர்வு எட்டவில்லை யென்றால் 15.02.2026 அன்று அச்சங்கத்தின் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **கலைஞரகம்** | **மு.சண்முகம் Ex.MP** |
| சென்னை - 17 | பொதுச் செயலாளர் |
| நாள்- 27.01.2026 | தொ.மு.ச. பேரவை |



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, கோலியனூர் தெற்கு ஒன்றியம், பிடாகம் ஊராட்சியில், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், ஒன்றிய கழக செயலாளர் தே.முருகவேல், கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர், கிளை நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருச்சி மத்திய மாவட்டம்

# திருச்சி மேற்கு மாநகரம் திருவரங்கம் கிழக்கு, திருவரங்கம் மேற்கு ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வட்டங்கள் மாற்றியமைப்பு!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கடந்த 13.1.2026 அன்று தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட திருச்சி மத்திய மாவட்டம், திருச்சி மேற்கு மாநகரத்திற்குட்பட்ட வட்டங்கள் பிரிப்பு அறிக்கையில் அறிவிக்கப்பட்ட **திருவரங்கம் கிழக்கு , திருவரங்கம் மேற்கு** ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வட்டங்கள் மாற்றியமைக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வட்டங்கள் அடங்கியுள்ள பகுதிகளில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருவரங்கம் கிழக்கு பகுதி**

**(2, 2அ, 4, 4அ ஆகிய 4 வட்டங்கள்)**

**பகுதி பொறுப்பாளர் : என். ராம்குமார்**

ஜி43/1, கோரல் பிளாக், விக்னேஷ்வரா
அப்பார்ட் மெண்ட், சீனிவாச நகர்,
திருவானைக்கோவில், திருச்சி

**பகுதி பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :**

1. பி.ஜிம்மு, கொள்ளிடம் ரோடு, வடக்கு வாசல், திருவரங்கம்
2. பெ.விஸ்வநாதன், 127, சாத்தார வீதி, திருவரங்கம்
3. ஆர்ட்டிஸ்ட் ஏ.காமராஜ், கோகுலே தெரு, திருவரங்கம்
4. கு. சுவாதி, நந்தினி நகர், மேலூர் ரோடு, திருவரங்கம்
5. சு.குணசேகரன், வ.உ.சி.தெரு, திருவரங்கம்.
6. ஜி. சம்பத், வ.உ.சி.தெரு, மேலூர், திருவரங்கம்.
7. பெ.லெட்சுமணன், திருவள்ளுவர் வீதி, திருவரங்கம்
8. எஸ். பழனிச்சாமி, நெல்சன் ரோடு, திருவானைக்கோவில்
9. க.பஞ்சநாதன்,தெப்பக்குளத்தெருமேற்கு, திருவானைக்கோவில்
10. ப. வீரமுத்து, காந்தி ரோடு, நெல்சன் ரோடு, திருவானைக்கோவில்.

**திருவரங்கம் மேற்கு பகுதி**

**(1, 1அ, 3, 3அ ஆகிய 4 வட்டங்கள்)**

**பகுதி பொறுப்பாளர் : எம்.ஏ.எஸ்.மணி**

83/84, தாமோதர கிருஷ்ணன்
கோவில் தெரு, கீழவாசல்,
திருவானைக்கோவில், திருச்சி.

**பகுதி பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :**

1. பாஸ்போர்ட் ஏ.ஸ்ரீதர், அருள்முருகன் கார்டன், திருவரங்கம்
2. எம்.ராமதுரை, தெப்பள்குளம் முதல் தெரு,திருவரங்கம்
3. என்.ஏ.நல்லாண்டவர், சக்தி மாரியம்மன் கோவில் தெரு.
4. கா. லட்சுமிதேவி, கீழத் தெரு, மேலூர், திருவரங்கம்.
5. மு.நேருஜி, கீழஅடையவளஞ்சான் தெரு, திருவரங்கம்.
6. சே. ரமேஷ், ரயில்வே ஸ்டேஷன் ரோடு, திருவரங்கம்.
7. சு. சுரேஷ், சக்தி மாரியம்மன் கோவில் தெரு, கீழவாசல், திருவரங்கம்
8. த. ராமகிருஷ்ணன், ஜான்சி நகர், அம்மா மண்டபம், திருவரங்கம்.
9. வீ. கணேசன், வடக்கு தெரு,மேலூர், திருவரங்கம்.
10. கோ. பிரகாஷ் கீழஅடையவளஞ்சான் தெரு, திருவரங்கம்.

| | |
|---|---|
| ”அண்ணா அறிவாலயம்” | **துரைமுருகன்** |
| சென்னை 18. | பொதுச்செயலாளர், |
| நாள் : 28.01.2026. | தி.மு.க. |

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை த.மு. ஆரியசங்காரன்

**சனவரி 29 (2016)**



**சிறுவயது முதல் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இரத்தினவேல் என்கின்ற இவர், 1942ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்க மாநாட்டு மேடையில், தனது 16ஆவது வயதில் பேசியபோது, தந்தை பெரியார் அவர்களால் ‘ஆரிய சங்காரன்’ என்று பெயரிடப்பட்டவர்.**

**1948ஆம் ஆண்டில் மும்பைக்கு குடிபெயர்ந்த இவர், 1951ஆம் ஆண்டு தி.மு.கழகத்தில் இணைந்து, தாராவி கிளைக் கழகச் செயலாளர், மும்பை தி.மு.க. செயலாளர், பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்**

**மராட்டிய மாநில ஆட்சியாளர்களிடம் கழகத்தின் சார்பில் நல்லுறவு கொண்டு மும்பைவாழ் தமிழ் மக்களுக்கு அளப்பரிய நன்மைகள் செய்து, மும்பை பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**


**2013ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் ‘‘பெரியார் விருது” வழங்கிச் சிறப்பித்தார் தலைவர் கலைஞர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ்.கே. சத்தியேந்திரன்

**சனவரி 29 (1986)**



**இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.**

**இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் – பின்னர், இராமநாதபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் களம் கண்டு சிறை சென்ற தீரர், நல்ல பண்பாளர், இனியவர், எளியவர், செயல் வீரர்.**

**“சேதுபதிச் சீமையின் செந்தாமரை மலரே! உறுதி குலையாத உடன்பிறப்பு என்ற பெருமைக்குரிய உனது கால்மலர்களில் எனது கண்ணீரைப் பன்னீராய்க் கொட்டி உனக்கு இறுதி வணக்கம் செலுத்துகிறேன். நிழற்படமாகி விட்டாய் எனினும், எங்கள் நெஞ்சில் நிலையான இடம் பெற்றுவிட்டாய்” என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**